உளி-1 | ஓசை-64 | ஜூலை-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மா.காளிதாஸ் - 4
ஷெண்பா - 5
ஐ.தர்மசிங் - 5
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 6
ச.ஆனந்தகுமார் - 6
பி.கே.சாமி - 7
சரண்யாசத்தியநாராயணன் - 7
ரா.ராஜசேகர் - 8
மகேஷ் சிபி - 9
க.ராஜகுமாரன் - 9
யாழ்முகில் - 10
கலிபூ - 10
ரிஸ்கா முக்தார் - 11
பூங்கோதை கனகராஜன் - 12
தி.கலையரசி - 13
மகிழினி காயத்ரி - 14
சௌவி - 15
மு.முபாரக் - 15
கதிரவன் வீ - 16
பார்வதி பாலசுப்ரமணியம் - 16
கோ. பாரதிமோகன் - 17
அகதா - 18
மழைக்குருவி - 18
தீபிகா நடராஜன் - 19
துளசி வேந்தன் - 20
சந்துரு.ஆர்.சி - 21
கருவை ந.ஸ்டாலின் - 22
துரை. நந்தகுமார் - 23
கோ.ஸ்ரீதரன் - 24
ஸ்ரீவாரிமஞ்சு - 25
வசந்த்பாரதி - 26
மதுரா - 26
வினோதன் - 27
பாண்டிச்செல்வி விஸ்வநாதன் - 28
சுப்பையா கந்தையா - 29
ஃபஷ்றி - 29
சே கார்கவி - 30
முகமது பாட்சா - 30
பிரபுசங்கர் க - 31
லக்ஷ்மி - 32
தங்கேஸ் - 33
பிரியா பாஸ்கரன் - 34
சுயம்பு - 34
ரகுநாத் வ - 35
ரத்னா - 36
வேலணையூர் ரஜிந்தன் - 37
நீர்ப் பறவை - 38
நயினார் - 39



என் மீது விழுந்த கல்
அவ்வளவு அமைதியாய்க் கிடக்கிறது
சொட்டு ரத்தம் பார்த்துவிட்டது
வந்த திசையைத் தேட வைக்கிறது
இன்னொரு கல்லுக்கான
முன்னெச்சரிக்கை தருகிறது
கவண்களின் வடிவத்தை ஆராய்கிறது
தேர்ந்தெடுக்கப்பட்டதன்
பெருமையை மெச்சுகிறது
ஒரு பிரமாண்டம்
எவ்வளவு சிறுத்ததெனச் சொல்கிறது
முன்பொரு முறை பசி போக்கிய
பழம் பெருமை பேசுகிறது
தெறித்து விழுந்த காலத்தின்
ஒரு கண்ணைப் போல
ஒழுங்கற்ற வடிவத்துடன்
நானுமொரு கல்லாக
சபிக்கப்பட விரும்புகிறேன்.

**மா.காளிதாஸ்**



கண்புரை சிகிச்சைக்குப் பிறகு
இத்தனை வருடங்களாக
மங்கலாகத் தெரிந்த மகளை
தெளிவாகப் பார்க்கிறார் அப்பா..
கண்ணுக்கு கண்ணாயிருந்த
மகளின் குளம் கட்டியிருந்த
கண்களில் கலங்கித் தெரிகிறது
அப்பாவின் சிரித்த முகம்..

**ஷெண்பா**

விழுந்தது பழுத்த இலை
காணாமல் போனது
இலையளவு நிழல்...

**ஐ.தர்மசிங்**



ஏதோ பயங்கர கனவு கண்டு
பயத்தில் அழுத குழந்தையை
“அழாத... அழாத...
அப்பா மேல காலப் போட்டுக்கோ!”
குழந்தையின்
கால்களுக்கும் கைகளுக்கும்
தனது உடலை வாகாய்க் கொடுத்து
அணைத்துக்கொண்ட தருணத்தில்
தகப்பனிடமிருந்து
சட்டென விலகி நிற்கிறாள்
இங்கிதம் தெரிந்த
கனவு தேவதை ஒருத்தி...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

கையில் அலைபேசி..
சித்திரப்படங்களுடன் ஆங்கிலப்பாடல்
பழசானது நிலா..
தேவைப்பட்டால் தொலைக்காட்சியின்
ரிமோட்டை கொடுத்து விடலாம்..
வீட்டுக்கும் தெருவுக்கும் நடை ..
அழுதால்.. குடும்பமே விளையாட்டு காட்டும்...
இத்தனையும் முடிக்கையில் பாதி
உள்ளிறங்கியிருக்கிறது..
மீதிக்கு வேறு ஏதேனும் யோசிக்க வேண்டும்..
ஊட்டுதல் என்பது அவ்வளவு
எளிமையானது அல்ல..

**ச.ஆனந்தகுமார்**

# ரசனையின் ஆதி



பச்சை உடையணிந்தவள்
புடவைகளை தேடிக்களைக்கிறாள்
தன்முன் அடுக்கப்பட்ட
அட்டைகளை எடுத்தெறியும் கிளிபோல.

பூவை விலக்கி
பட்டாம்பூச்சியை விலக்கி
இலைகளை விலக்கி
ஆப்பிள் கனிவரைந்த
அவளின் தேர்வை
தன் துணைவனிடம்
காட்டுகிறாள்
ஆதி ரசனையோடு...

ஆதாம் கண்களில்
விலைப் பட்டியல்
சர்ப்பமாய் ஆடுகிறது.

**பி.கே.சாமி**

தொலைக்காட்சியில்
ஒரு காதல் பாடல்..
நாம் சேர்ந்திருந்த காலம்
கண் முன் ஒளிபரப்பானது...
வரிகள் பாடிய பொழுது
பேசியதும்
கருவிகள் இசைக்கும் பொழுது
பார்த்து சிரித்து
திளைத்த நிமிடங்களுமாக...
முழுவதுமாய் அதை
அனுபவிப்பதற்குள்
தடைபட்டது மின்சாரம்...
ஆம்
தடைபட்டது.

**சரண்யாசத்தியநாராயணன்**

# ஊமைப் பெருமொழியாளன்



சொற்கள் தேடி அலைந்தான்
பெருமொழியாளன் ஒருவன்

கடல்
காடுகள்
மலைகள்
வயல்வெளிகள்
ஆறுகள்
ஓடைகள்
நீர்நிலைகள்
மணல்வெளிகள்
மனவெளிகள்
மனிதரற்ற வெளிகள்
தேடித் தேடிச் சேகரித்தான்
யாருக்கும் நெய்ய வாய்த்திடாதனவாக

பெரும் கர்வம் பீறிட
சென்றான் பெருஞ்சொற்களுடன்
கடவுள் உள்ளிட்டோரை
கவர்ந்து மொழியூமையாக்கும்
முடிவுடன்

சேர்ந்தவிடத்தில்தான்
மாபெரும் சொற்கள் மலைத்து வலுவிழந்தன

ஊமை ஒருவனின் குறுஞ்சிரிப்பில்
பேருரை கேட்ட ப்ரிய மயக்கத்தில்
கடவுளும் மனிதப்பிறவிகளும்
கண்டு

**ரா.ராஜசேகர்**



இருந்ததையெல்லாம்
முன்னமர்ந்து வாலாட்டும்
நாய்களுக்குப் போட்டுவிட்டு
வெறும் தண்ணீரை மட்டும்
குடிக்கும் தேசாந்திரி
சாலையில் நடக்கத் தொடங்குகிறான்
பனிப்பொழிவை காட்சிப்படுத்துகிறது
பௌர்ணமி நிலவு
போதாக்குறைக்கு சாலையினோரமாய்
தலைகுனிந்து நின்றுகொண்டிருக்கும்
சோடியம் விளக்குகளும் சேர்ந்து கொள்கின்றன
நிலவோடு
அவனை நெருட முற்படும்
பசியின் நாவுகளை முன்கூட்டியே அறியும் நிலவு
அவனுக்காய்
இறங்கி வந்து ஆப்பமாகிறது
நடந்து கொண்டே
கொஞ்சம் கொஞ்சமாய் பிட்டு
வாயில் போட்டுக்கொண்டவன்
பாடலொன்றை பாடியபடி
சாலையின் முடிவிலிப்புள்ளியில்
இறங்கிப் போகிறான்
தணியத் தொடங்குகிறது
எல்லாருக்குமான பசி

**மகேஷ் சிபி**

தாகம் சூடியபடி
பிரிவு பூக்கும் பாதையில்
அண்மை உதிருகிறது

நீ
வரிகளில்லாத பாடல்
மொழியில்லாத ராகம்

ஞாபக மலர் சூடிய
காதலின் கிளைகளில்
இக்கணங்களில் வாசம்

தொலைவுக்கு நிலவின்
பெயரை சூட்டிய காலம்தான்
உன்னை எனக்கு கொடுத்தது

காலம் அலையடிக்க
கண்ணீரில் மிதக்கும் ஞாபகம்
கரையொதுங்கி கிடக்கிறது

தன் கிழக்கை இழந்த பிறகு
நதியின் கரையில் உதிரும் இலை
அமிழ்வதுதான் விதி

**க.ராஜகுமாரன்**

# அப்பா....



நெடுஞ்சாலையோரம்
உள்ள உணவகங்களில்
எல்லாம்
விருந்தோம்பலுக்கு
விருந்தினரை அழைக்கின்றார்.
அப்பாவின்
வயதை ஒத்த
ஒட்டிய வயிற்றுடன்
இருக்கும் காவலாளி!

**யாழ்முகில்**

தள்ளாத வயது.
வேகாத வெயிலு.

முதியோர் தொகை வாங்க
மூன்று மைல் நடந்ததில்
வேர்த்து விறுவிறுத்து
நீர்ச் சத்து குறைந்ததில்
கிறுகிறுத்துச் சரிந்தேன்
நான் நடைபாதையில்.

என்னைக் கடந்த சிலர்
குப்பையைப் போல்
அலட்சியமாய் கடந்தனர்.

இன்னும் சிலர்
குடிகாரன் என்றெண்ணி
“கிழடுக்கு இருக்கும்
கொழுப்பைப் பார்” என
ஏளனமாய் ஏசினர்.

துடுக்கான ஒரு இளைஞனோ
“குடித்து மட்டையாக
வேறு இடமா இல்லை” என்று
எள்ளி நகைக்கிறான்.

ஒரு பிச்சைக்காரர்தான்
மெல்ல என்னைத் தூக்கி
தண்ணீர் புகட்டுகிறார்.

அவர் தந்த தண்ணீரில்
எச்சம் இருந்தது !
ஆனாலும் அதில்தான்
மனிதம் இன்னும்
மிச்சம் இருந்தது !!

**கலிபூ**



அவளில்லாத வீட்டைப்பழகுவது
அவ்வளவு எளிதல்ல

காலையில் கலைத்துப்போனவை
மாலைவரை அப்படியே இருக்கும்
அறைகள் தோறும் ஆங்காங்கே அழுக்குகள்
படிந்திருக்கும்
தண்ணீரின்றி முற்றத்துச்செடிகள்
மெல்ல மெல்ல இறந்துகொண்டிருக்கும்
துவைத்திடாதத் துணிகள் வார இறுதிக்கெனக்
காத்திருக்கும்
புழங்காத சமையலறைகள் வேற்றுக்கிரகமெனக்
காட்சியளிக்கும்
பக்கம் கிழிக்காத நாட்காட்டிகள் வெறுமனே
தொங்கிங்கொண்டிருக்கும்
காற்சட்டைதனில் பிரிந்த நூல் தைக்கப்படாதிருக்கும்
மாற்றப்படா ஜன்னல் திரைகள் நிறம்
மங்கிப்போயிருக்கும்

அவளில்லாத வீட்டைப்பழகுவது
யாருக்கும்
அவ்வளவு எளிதல்ல

அவள்களே
சமயங்களில்
கை கால் முளைத்த வீடுகளாக
இருப்பதனால்
நீ களைத்துப்போய் திரும்புவதும்
மனமுடைந்து வெளியேறுவதும்
அவள்களிடமிருந்தே
தவிர
வீடுகளிலிருந்தல்ல

எனினும்
உண்மையில்
அவளிருந்த வீடுகள்
அவளற்றுப்போகையில்
ஒளியற்றுத்தான் போய் விடுகின்றன

**ரிஸ்கா முக்தார்**



அடர்ந்த இரவின் தனிமைக்குள்
அசைபோட்டு உறக்கம்
தழுவாத இமைக்குள் இழைக்கும்
சொற்களில் செதுக்கிய
சிற்பங்களும்

பனித்தூவும் மலையோர
தேசத்தின் வளர்ந்திட்ட
புற்களாய் மண்டிக்கிடக்கின்ற
நினைவுத் துளிகளும்

தாகந்தணியாமல் நெஞ்சோடு
ஒட்டிக்கொண்டு நெருப்பின்
அகிற்புகையாக மனதெங்கும்
வியாபித்த நறுமணமும்

எங்கோ தீர்வைத் தேடி பயணப்பட்ட நதி கடலுக்கு
பாதை தேடிக்கொண்டு
விழியோர இமைக்கு சிறகுகள்
முளைத்துப் பறக்கின்றன

**பூங்கோதை கனகராஜன்**



1). சிறகை விரித்து பறக்க
துடிக்கும் பொழுதே
விடியல் பிறந்து விடுகிறது.
***

2). முகாரியில் அழும் இரவுக்கு
எப்படியும் ஒரு விடியலின் பூபாளம்
கிடைத்து விடுகிறது.
***

3). இருளை
ஒளியாக மாற்றும் வித்தையை
விடியலிடம் கற்றுக்கொள்.
***

4). கூம்பி இருக்கும் மலர்கள்
விடியல் மீது மலர்த்தி வைத்திருப்பது நம்பிக்கையை.
***

5). உன் புறம் இருள் சூழும் போதே
மறுபுறம்
உனக்கான விடியல்
ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.
***

6). ஒவ்வோர் உயிரின் காத்திருப்பும்
விடியலுக்காய் அன்றி
வேறெதற்காம்?
***

7). மௌனத்தால் அச்சுறுத்துகிறது இரவு.
கரகோஷம் செய்து
மீட்கிறது விடியல்.
***

8). மனம் தளராமல்
இருள் தீட்டுகிறது
விடியலின் வண்ணத்தை.
***

9). ஒளி கொண்டு அறைகிறது
விடியல்.
உடைந்து விழுகிறது
வானத்தின் முகமூடி.
***

10). ஆதி பெருவெளியை
கொண்டாடுபவனுக்கு
உறுதியாக வசப்படுகிறது
விடியல்.

**தி.கலையரசி**



ஒரு
சொல்லைத்தான்
இறுகப் பற்றியிருக்கிறேன்
அது கடல் போல்
பெருகிக்கொண்டே
இருக்கிறது

இறுதி
வாழ்விலும்
அந்த சொல்தான்
ஏந்தியிருக்கப்போகிறது
மொத்தத்தையும்

உடுக்கையொலிக்காடும்
விரல்களின்
நடனங்களில்
திருவிழா கொண்டாடும்
மகமாயி
ஏந்தியிருப்பதும்
அந்த சொல்லைத்தான்

முப்புரம்
எரித்தவனின்
மும்முலை பெற்றவளின்
நான்காம் தனமும்
அதுதான்

துருபதனின்
மகள் ஏந்திய
சொல்லும் அதுதான்

அனுமன்
ஏந்திய அசோகவனத்தின்
முத்திரை மோதிரம்
ஈந்தவள்
கடைசி வரை
அணிந்த சொல்லும் அதுதான்

சுயம்
ஏந்திய சுடரொளி
அச்சொல்
இறுகப்பற்றியிருக்கிறேன்

**மகிழினி காயத்ரி**

# கோலம்




கொஞ்சமாய்ப் புள்ளிகள் வைத்து
சிறிய கோலம் போடுவாள் அம்மா
நிறையப் புள்ளிகள் வைத்து
பெரிய கோலம் போடுவாள் அக்கா
இரண்டுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில்
புள்ளிகளிட்டு
சிறியதுமற்ற பெரியதுமற்ற.
நடுத்தரக் கோலம் போடுவாள்
எப்போதேனும் வீட்டுக்கு வரும் சித்தி
குளக்கரையில் அமர்ந்திருக்கிறேன்
ஒற்றைப்புள்ளியில்
ஒரு வட்டக்கோலமிடுகிறது
பெய்யத்துவங்கும் மழை

**சௌவி**

இறந்ததும்
கடவுளாகிப்போகிறார்கள்...
வாழும் போது
சாத்தானென தூற்றப்பட்டவர்கள்!

**மு.முபாரக்**

# சுதந்திரம்



சுதந்திரமாக பறக்கும் பட்டம் யார் கையிலோ நூல்

நேற்று வரை சுதந்திரமாக பறந்த கொடி
கட்டி சுற்றி வைத்திருக்கிறார்கள்
யார் வந்து ஏற்றவோ

சுதந்திர தினமென பறக்க விடப்பட்டது பலூன்கள்
சிறைபட்டது யாரின் மூச்சு காற்றோ

தாகமென வரிசையில் பிள்ளைகள்
குடிநீர் குவளையில் சங்கிலியில் பிணைக்கப்பட்ட
குடிநீர் குவளை

சட்டென வெடித்த பலூனின் மேல் அத்தனை பேர் பார்வை
சுதந்திரம் கண்டது காற்று

**கதிரவன் வீ**

கால வெள்ளம் அடித்துச் சென்ற
பெரும் பிரளய காலமொன்றின் முடிவில்
சிறு துளியில் தோன்றும் அமீபாவாய்

துளிரும் சிறு செடியின் வேர்பிடித்துக் கொள்கிறது
மனித நம்பிக்கை!

**பார்வதி பாலசுப்ரமணியம்**



இதயமிருப்பதற்கான சாட்சியே
அது துடிப்பதுதானே

அணைத்துவிடுவாள் போலிருக்கிறது
நடுங்கும் சுடரை அவள்
நான் சம்மதம் கோருகிறேன் என்று

காதலை யாசிப்பதென்ன அத்தனைப் பிழையா

உப்புப் பிசுக்கில் ஒன்றுமில்லை வியப்பதற்கு
கண்ணீருக்கு நேர்ந்து விடப்பட்ட
கண்கள் எனது

போர்களில் சாயாதவனின் விழுப்புண்கள்
அவள் விழிகளின் கருணை

கனத்த அங்கியால் மறைக்கலாம்
காயத்தை
போர்வைகள் ஏதுமில்லை
இதயத்தின் அளவிற்கு

அளவைக்கு அடங்காத துயரை வழங்கிய
விதியின் கரம்
தீட்டியது என் ஆயுளை

எனது தாகத்திற்கு
கண்ணீரை ஊற்றாக்கியிருக்கிற
இந்த பாலை மணல்
காதலின் கர்ப்பத்தில் பொடிந்தது

**கோ. பாரதிமோகன்**

# கணக்குநோட்டு



வாத்தியார் முரளிக்கு கணக்குப் பிடிக்காது
கணக்கு ஒரு பாடமா என்பார்
வரலாறு பாடம்தான் உலகின் உயர்ந்தது என்பார்
கதை கூறி கதை கதைப்பார்
அவரது வகுப்பில் தெரியாமல்
கணக்கு வீட்டுப்பாடம் செய்த என்னை பெஞ்ச் மீது
நிற்க வைத்துவிட்டார்

கணக்கு டீச்சர் ராணிக்கு கல்யாணம்
பள்ளிக்கூடமெங்கும் பத்திரிகை
வைத்துக்கொண்டிருந்தார்

சிலர் வாழ்த்தினர்
பலர் பெருமூச்சுவிட்டனர்

பள்ளிக்கூட மணியடித்து
வீடு திரும்புகையில்
நானும் பத்திரிக்கைப் பார்த்தேன்
மாப்பிள்ளை பெயரில் முரளி என்றிருக்க
இரவு முழுக்க உறக்கமே வரவில்லை
பெஞ்ச் மீது ராணி டீச்சர் நிற்பதுபோன்று கனவு
வேறு

**அகதா**

…லாம் நூலகங்களிலிருந்து
புத்தகங்களை திருடும் பழக்கமெனக்கு இருந்தது

பிறகு பக்கங்களை
பிறகு வாசகங்களை

இப்போது ஒரு சொல்லை மட்டும்

அதிலிருந்து ஓராயிரம் சொற்கள்
ஓராயிரம் சொற்களில் இருந்து
ஒரு கோடி சொற்கள்

ஒரு பூக்காரனைப் போல
சொற்களை வைத்து பின்னிக்
கொண்டேயிருக்கிறேன்

எத்தனை மாலைகள்
அதில் எத்தனை வண்ணங்கள்

நான் பல நாள் திருடன்
ஒருநாளும் அகப்பட்டதில்லை.

**மழைக்குருவி**

# டிசம்பருக்காக காத்திருத்தல் ஒரு வரம்!



கிறிஸ்துமஸ் பூக்கும்
டிசம்பர் இரவொன்றில் தான்
வடக்கு நோக்கிப் பயணப்படும்
கனவொன்றைக் கண்டுகொண்டிருக்கிறேன்.
கிறிஸ்துமஸ் பூக்கும்
டிசம்பர் இரவொன்றில் தான்
மாரியும் ஜோவும் கடைசியாக
சந்தித்துக்கொண்ட அத்தியாயமொன்றை
தவறாமல் படித்துக்கொண்டிருக்கிறேன்.
கிறிஸ்துமஸ் பூக்கும்
டிசம்பர் இரவொன்றில் தான்
அந்த ஆண்டின் மகிழ்ச்சியையெல்லாம்
ஒரே கூட்டில்
தேனியைப் போல
சேமித்துக் கொண்டிருப்பேன்.
கிறிஸ்துமஸ் பூக்கும்
டிசம்பர் இரவொன்றில் தான்
அடுத்த ஆண்டுக்கான
அழகான கனவொன்றை
வரையத் துவங்கியிருப்பேன்.
கிறிஸ்துமஸ் பூக்கும் ஒவ்வொரு
டிசம்பர் இரவிலும்
எனக்கான தேவதை பொம்மையோடு
கிறிஸ்துமஸ் தாத்தா வருவாரென
சந்தேகமின்றி நம்புகிறேன்
ஆம்!
டிசம்பருக்காக காத்திருத்தல் ஒரு வரம்!

**தீபிகா நடராஜன்**



தோட்டத்திலமர்ந்து
நானும் குட்டிமகளும் வீட்டை
வரைவதென்று தீர்மானித்தோம்,

ஓடிப்போய் கிரையான்ஸ்களையும்
இரண்டு பென்சில்களையும்
வெற்றுத்தாள்களையும் எடுத்துவந்தாள்,

மும்முரமாய் வரையத்தொடங்கினோம்,

அரைமணி நேரத்தில்
வரைந்துமுடித்தேன் நான்,

அந்திவரை
வரைந்துகொண்டேயிருந்தாள் அவள்,

நூறு முறைக்கு மேல்
வீட்டை பார்த்து பார்த்து
ஒருவழியாய் வரைந்து முடித்தாள்,

கடைசியாய் வரைந்ததை
கையில் திணித்துவிட்டு
ஒரு பட்டாம்பூச்சி பின்னே
ஓடி மறைந்தாள்,

நேரம்போகாத நான்
இரண்டு ஓவியங்களையும்
ஒப்பீடு செய்யத்தொடங்கினேன்

நான் மாடி வரைந்திருந்தேன்,
அவள் மாடியில்
பூந்தொட்டிகள் இருந்தன,

நான் சன்னல் வரைந்திருந்தேன்,
அவள் சன்னல் திறந்திருந்தது,

நான் தாழ்வாரம் வரைந்திருந்தேன்,
அவள் தாழ்வாரத்தில்
ஒரு புறா நின்றிருந்தது,

நான் வெளியில் தொங்கும்
கிளிக்கூண்டை வரைந்திருந்தேன்,
அவள் கூண்டிலிருந்து கிளி பறந்திருந்தது,

நான் வாசல் வரைந்திருந்தேன்,
அவள் வாசலில்
கோழி இரைக் கொத்தியிருந்தது,

நான் வரவேற்பறையில்
புத்தர் சிலையை வரைந்திருந்தேன்,
அவள் புத்தர் தலை மேலே
மரமொன்று இருந்தது,

நான் கொட்டகையில்
பசு வரைந்திருந்தேன்,
அவள் கொட்டகையில்
கன்று பால் குடித்திருந்தது,

நான் வாசல் மலரொன்றை
வரைந்திருந்தேன்,
அவள் மலரில்
பட்டாம்பூச்சி தேனெடுத்திருந்தது,

நான் தோட்டம் வரைந்திருந்தேன்,
அவள் தோட்டத்தில்
வெள்ளாட்டுக்குட்டி துள்ளியிருந்தது,

நான் துளசி மாடம் வரைந்திருந்தேன்,
அவள் துளசி மாடத்தையென்
மனைவி சுற்றிக்கொண்டிருந்தாள்,

நான் முற்றத்தை வரைத்திருந்தேன்,
அவள் பரணில் கிடக்கும்
அப்பாவின் சாய்வுநாற்காலியை
அங்கே நகர்த்தியிருந்தாள்,

நான் திண்ணை வரைந்திருந்தேன்,
அவள் திண்ணையில் ஓரமாய்
அப்பா முடங்கிக்கிடந்தார்,

நான் சன்னலில் தொங்கும்
அப்பாவின் கைத்தடியை
வரைந்திருந்தேன்,
அவள் கைத்தடிக்கு பக்கத்தில்
அப்பாவின் மூத்திரப்பையையும்
ஒரு காலித்தட்டையும் கவிழ்த்திருந்தாள்,

நான் கவனித்ததையெல்லாம்
வரைந்திருந்தேன்,
அவள் யாரும் கவனிக்காத
அப்பாவின் தனிமையை
வலிக்குழைத்து பூசியிருந்தாள்,

இப்போது அவள் வரைந்திருக்கும்
ஓவியத்தில் என்னை ஏக்கமாய்
பார்க்கிறார் அப்பா,

அருகிலிருக்கும் மூத்திரப் பைக்குள்
சொட்டுகிறது என் கண்ணீர்த் துளிகள்...

**துளசி வேந்தன்**



துரோகத்தின்
அனைத்து வழிகளாலும்
தனது வெற்றிகள்
தட்டிப் பறிக்கப்பட்டதை
தாமதமாய் உணர்ந்தவன்
வெளிச் சொல்லாமல்
அடுத்த முயற்சிக்குள்
ஆழ்ந்த வேளையில்
அவசரமாய் அறிவிக்கிறார்கள் அவனுக்கான
வெற்றிப் பரிசை.
நேற்று போலில்லை அவன்
தெளிவாகவே புரிந்துகொண்டிருக்கிறான்
உறுதியாகிவிட்ட
பிரம்மாண்ட
வெற்றியிலிருந்து
திசை திருப்புவதற்கான
முன்னறிவிப்புதான்
இந்த வெற்றிப் பரிசென்று.
துரோகங்களை
சகித்துப் பழகிய
மூதாதைகளின்
அடிமைத் தடங்களின்
எதிர்திசைக்குள்
இறங்கி நடக்கத் தொடங்கிவிட்டது
அவன் கால்கள்...

**சந்துரு.ஆர்.சி**

# குறியீடல்ல சிலுவைகள்



இந்தத் தெருவின் சாலை
வடிவமும்
ஒத்துப்போகும்,

உருவாவதற்கு முன்பு
குறுக்கும் நெடுக்குமாக
பின்னிப் பிணைந்திருந்தது
அம்மரத்தின் கிளைகள்,

இடது பக்கமாக குருதி
ஒழுகவொழுகக் கிடக்கும்
சடலத்தின்
கரம் விரிந்த நிலை,

நேர்கோட்டில் தவழும்
நதிகளின் இடையில்
கல்லெறியும்
சிறுவனின் வீச்சு,

எல்லா நிலைகளிலும்
வாங்கிய பாவங்களை
ஏற்கனவே
சுமந்து கொண்டு இருக்கும்
சிலுவைக்கு
எதற்கு இன்னொரு சுமை,

இறக்கி வையுங்கள்
அவரை,
கொஞ்சம் சிலுவையின்
பாவத்தையும்
சேர்த்தே மன்னித்து...

**கருவை ந.ஸ்டாலின்**

# காடெங்கும் வாடை.



கவ்விய இரை
நழுவி இறங்கிவிடாது
பசியில் கூச்சலிடும் குஞ்சுகளுக்கு
இதோ வந்துவிடுவேனென
எதிர் குரலிடுக்கிறது
தாய்ப் பறவை.

பறத்தலின் பின்
மென் அதிர்வில் அடங்குகிறது
நுனிக்கிளையும்
குஞ்சுகளின் இரைப்பையும்.

ஆழ ஆழத்தில் அமிழ்ந்திருக்கும்
வேர்
தொப்புள் கொடியின் முழு நீளமும்
ஈரத்தில் முயங்கிக்கிடக்க...

காடு முழுக்க
அப்படிக் கிடக்கிறது
தாய்ப் பாசத்தின் வாடை.

**துரை. நந்தகுமார்**

## குட்டி மகள்-7



ஒரு புட்டி பிராந்தி வாங்கத்தான்
பர்ஸை திறந்தேன்
பட்டவர்த்தனமாய் கலர் படத்தில்
சிரிக்கிறாள் குட்டி மகள்.
பெருங்குழப்பம் ஆரம்பம்
குடித்துவிட்டு குட்டிமகள் கவிதையெழுதி
சீக்கிரமே சாவதா.
அல்லது குடிக்காமல்
உடம்பு பேணி கடைசிகாலம்வரை
அவள் போஷிப்பில் சாவதா என....

முகத்தில் தழும்பேறிய முரடனொருவனை
நன்கு தெரியும்
அவன் பள்ளி முடிந்து அவன் குட்டி மகளை
கூட்டி போகையில்
ஒரு ஆட்டுகுட்டி கர்த்தரின் கையினில்
அடைப்பட்டிருக்கும் பிம்பமொன்று
தெரிவது எனக்கு மட்டுந்தானா....
***
அவள் விரும்பிய சித்தன்னவாசல்
ஸகூல் டூருக்கு நான் அவளை
அனுப்பவில்லை
அதற்க்குபோய் அழுது கொண்டே
தூங்கிப்போயிருக்கிறாள் குட்டிமகள்
நான் வரைந்த ஓவியம் என் கண் பார்வையிலிருக்க
வேண்டும் என்கிற உரிமையில்லையா எனக்கு?
நீயே சொல் பல்லவா காலங்கள் கடந்து
செத்தும்கூட
நீயும் அதைத்தானே விரும்புகிறாய் கல்வெட்டில்
உன் பெயர் செதுக்கி.....

புதுக்கார் வாங்கினால் குட்டிமகள்
பெயரை பின்னங்கண்ணாடியில்
ஒட்டாதீர்கள்
முன்னாங்கண்ணாடியில் ஒட்டுங்கள்
திருப்பித்தான் தெரியும் உங்கள் கண்களுக்கு
ஆனால் அதை கண்டவுடன் நீங்கள் அழுத்த
விழையாத ஆக்ஸிலேட்டர் வேகம்
உங்களின் ஆயுளை நிச்சயம் நீட்டிக்கும்....

இப்பல்லாம் குட்டிமகள் லாவகமாய் பூ
தொடுக்கிறாள் கடவுள்களே உங்களுக்கான
மாலைக்கு இப்போதே முன் பதிவு செய்து
கொள்ளுங்கள்....

கிளிப்பச்சை கலரில் துத்தநாக கலர்
மேல்சட்டையோடு பாவாடை தைத்திருக்கிறேன்
குட்டிமகளுக்கு
அம்மா என் நினைவலிருக்கும் உனக்குத்தான்
நேனோ வடிவம் வடிக்க இத்தனை ஏற்பாடு....

நீ வா போவென அழைத்தால்
டன்லப் செருப்பு அழுந்த பதிய
அடித்த அப்பாவிற்கு இதுவும் வேண்டும்
இன்னமும் வேண்டும்
அடுத்தமுறை அவரை கோபாலன் என்றே
பெயர் சொல்லியழைத்து யானை ஏறு
குட்டிமகளே.....

பிச்சைக்காரர்களே உங்களுக்கொரு
சிரம் தாழ்ந்த விண்ணப்பம்
குட்டிமகளுடன் கோவில் வரும்போது
தயை கூர்ந்து தட்டு குலுக்காதீர்
குருவி போல் சேர்த்த சொத்தெல்லாம்
கரைந்துவிடும்போல அவளின்
பெருங்கருணையால்....

புன்னகையரசி கே ஆர் விஜயாவும்
அவர்களின் வழித்தோன்றல்
ஸ்னேகாவும் கூட
முன்னம்பல் ஓட்டையாயிருக்கும்
என் குட்டிமகளை போலிருந்துதான்
இவ்வளவு அழகாய் சிரிக்கிறார்கள்
என்கிற யதார்த்தமதை
இச்சபையில் சொல்லிக்கொண்டு.....

**கோ.ஸ்ரீதரன்**



கணக்கெழுதி குடும்பம் நடத்தினாலும்.....
உறவுசனம் வந்து போன
வாசத்தில்....
மாச சாமான் முன்னாடியே
பொக்கைவாய் காட்டிடும்.....

சாம்பார் சாயலில்
சிறு பருப்பு சாம்பாராக...
காலியாய் போன அரிசி
கோதுமை மாவாகும் ....
வெறுத்து நிற்கும் உப்புமா
ஆஹாவென ருசிபடும்...

ஓரம்கட்டிப் போட்ட
தட்டையும்...மொச்சையும் மணந்து கிடக்கும்.........

குழிக் கரண்டி எண்ணையில் மிதந்த
மொருவல் தோசையை விட..... தொட்டு தடவி
ஊற்றிய தோசை...
அருமையென நல்ல பெயர் சூட்டி நிற்கும்....

ரொட்டிகேட்ட பிள்ளைக்கு
வயிறு கட்டும்மென...
புது புத்தி முளைக்க ......
பொரிவிளங்கா உருண்டை
சத்தாக்கப்படும்.....

காலியான நாப்கின் பாக்கெட்டில்
வீசியெறிந்த காட்டன் துணிகள்
பக்குவமாக்கப்படும்.....

இறுதி நாட்களில் ....
இறுக்கி கொள்ளும் கயிற்றை
சாமார்த்தியமாய் கழட்டி கொள்வதில்......
நாங்கள்
நடுத்தரவர்க்கத்தின் சாமானியர்கள்....

**ஸ்ரீவாரிமஞ்சு**



சாலையோரம் நடந்து செல்கையில்
தரையில் விழுந்துகிடந்தது
சட்டையில்
இருக்க வேண்டிய தேசியக்கொடி
தலைக்குனிந்தவாரே நடந்துவந்த
சிறுமி கண்ணில் பட்டது.
பதைபதைப்பில்
குனிந்தவாறு
பொறுக்கி
எடுத்தால் தேசியக்கொடி யை தூசிப்படாதிருக்க
பாவம் அவள்...
மிதிப்பட்ட
ஒரு கொடியை மட்டுமே
காப்பாற்ற
முடிந்தது...
மிதிப்படும் தேசத்தை....

**வசந்த்பாரதி**

காலத் துயரைக்
கடக்க முனைகிறது உடல்.

உள்ளமும் உயிரும்
ஏழுமலை ஏழுகடல் தாண்டி
எங்கேயோ இயைந்திருக்கிறது.

அறமெனப் பயிற்றுவித்தோர்
யாரும் அகப்படவில்லை
தற்போது.

கடவுளும் அல்ல..
சாத்தானுமல்ல
கனிந்து காய்த்துப்போய்
கல்லாய்க் கிடக்கிறது
மனசு.

சற்றே பொறுங்கள்..!!

ஏதோவொரு செவியை
எட்டட்டுமதன் இறைஞ்சல்கள்..

**மதுரா**



என்னை
விழச்செய்திடாது
எனும் உணர்வை
மனக்காட்டு
மயில்களுக்கு
பச்சை குத்தியிருக்கிறது !

தூக்க வரும்போதும்
எதிர்க்க ஏதுமில்லை,
ஒரு அனிச்சை
ஓராயிரம் இச்சையோடு
நடக்கும்போது
கன்னுக்குட்டியாகித்தானே
திரிய வேண்டும் ?!

அச்சுழற் கரங்களில்
முத்தச்சூட்டால்
எழுதும் போதெல்லாம்
என்ன தூக்கிப் போட்டுவிட்டு,
தரை தோடும்முன்
தாவிப் பிடித்துக்கொள்ளும் !

எட்டும் திசைகளும்
எட்டாது தூரத்தில் ,
எல்லைகள் ஏதுமில்லை,
அக்காந்தக் கரத்தோடு
கரைந்திட தோன்றும்,
விழுந்த பொழுதெல்லாம்
விழியோரம் விளையாடும் !

ஒருநாள் – என்னை
அக்கரம் தாங்கிப்பிடிக்க
மறந்துப் போகலாம்,
ஆனால் இப்பிரபஞ்சம்
சுவாசிக்கும்வரை
அச்சுழல் என்னை
சூழ்ந்தேயிருக்கும் !

வரங்கள் தந்து
என் கரம் பற்றி
தூக்கிப்பறக்கும்
வானச் சுழலுக்கு
வதனங்கள் இல்லை !

**வினோதன்**

# தொடுக்கப்படாத பிலாக்கணம்



அச்சான்யத்தின் அறிகுறிகள்
உந்தித்தள்ள
அர்த்தங்கள் பொதிந்த
உயிருக்கு கூடடையும்
அந்திமத்து பறவையின் அவசரம்

கெட்டிபட்ட கண்ணீரின்
சாயலில் வழியவிட்ட
பிசினோடு
தலைகோதும் காற்றையும்
சட்டை செய்யாது
மும்முரமான
மௌனத்திலிருக்கும்
வாசல் முருங்கை மரம்

இதமான ஈரமாய்
யாவிலும் வியாபித்திருந்தது
நிசப்தம்

நீண்ட நெடிய நாடகத்தின்
உணர்ச்சி பொங்கும்
உச்சகட்ட காட்சியில்
நடித்து முடித்த அயற்சியில்
ஒப்பனையும் கலைக்காது
உறங்கத்துவங்கிய
உடலை
கண்ணாடிப்பேழை
கவர்ச்சியாய் காட்சிப்படுத்தியது

அழுத்தவிசையற்ற
உறக்கத்தை
தூரத்திலிருந்தே
வேடிக்கை பார்த்துக்கொண்டிக்கிறது
தோள்களை ஸ்பரிசித்தே வாழ்ந்து
வாசம் பூசிக்கொண்ட
உப்பிய ஜோல்னா பை
அதன் வயிற்றிலிருந்து
வழிந்துகொண்டிருந்தது
பகரப்படாத ஏக்கங்கள்

வீசியெறிந்த வார்த்தைகளெல்லாம்
குத்துக்காலிட்டு மூலையில்
அமர்ந்திருக்க

வரிசைகட்டி நிற்கும்
வாய்கட்டிய
பிணங்களல்லாதவைகளால்
தொடுக்கப்படாத
பிலாக்கணம் மட்டும் தொக்கி நிற்கிறது

**பாண்டிச்செல்வி விஸ்வநாதன்**

# ஆத்மார்த்தம்



பேருந்து பயண வெளிக்காட்சியில்
கொரத்தட்டைக் கோரைகள்
காற்றிலாடிக் கொண்டிருந்ததை
ரசித்தபடி பல பயணிகள் இருக்க
கூட பயணித்த
நாதசுவர வித்வானோ அவற்றை
அன்பு புனைந்து உள்ளார்ந்து பார்த்த அந்த
பாசப்பார்வைக்கு என்ன பெயரோ
அதே பெயர்தான்
நடக்க ஆரம்பித்து நாலு மாதமான
குழந்தையை வீட்டில்
பெரிய மகளிடம் ஒப்படைத்து வந்த தாய்
தனது நூறு நாள் வேலைத்திட்ட
மண் சாலை ஓடை வேலையினூடே
சாலையில் தாயின் ஒக்கலில்
அமர்ந்து செல்லும்
குழந்தையை பார்க்கும் பார்வைக்கும்

**சுப்பையா கந்தையா**

காலையில் கடையின் கண்ணாடிக் கதவுகளைத்
திறந்து கொண்டு நுழைகிறேன்
மாபிள் தரையில் சுறுண்டு படுத்திருக்கிறது
நேற்று கடைக்கு வந்த பெண்ணின் கூந்தலின்
ஒற்றையொன்று
அது
அந்த சிங்களப் பெண்ணுடையதா
முஸ்லிம் பெண்களுடையதா
யாருடையதாயிருந்தாலும் மயிர்தான் அதன் பெயர்
அந்த மயிரின் தலை இப்போது எந்த நிலையில்
எங்கிருக்கிறதோ
என்ன செய்கிறதோ
எதைப் பற்றிச் சிந்திக்கிறதோ என்று நரைத்த
முடிக்குக் கீழேயுள்ள இந்த மூளை சிந்திக்கிறது.

**ஃபஷ்றி**

# புத்தனின் மௌனக்கவிதை



இலைகளின் பாதம்
தொட்டு காதம் நகற்றும்
காற்றோடு சிறு காதைகளை
அடிக்கோடிட்டு
மேற்குறியிட்டு மனயம்
செய்துவிட்டு
சற்று ஆன்மிக நெம்புகோல் கொண்டு
காற்றாய்
நகர்த்தி அடிக்கு அடி
எல்லைகளை குத்துக்கல்லாய்
நீரோடை மீதும்
குவியல் நிறைந்த மலை மேடுகளிலும்
யாராலும் நகர்த்த இயலாத
மௌன எடைகளை நகர்த்த முயல்கிறது
ஒரு சொட்டில் வடிந்து எழுத்துகளாய் படர்கிறது
புத்தனின் மௌனக்கவிதை....

**சே கார்கவி**

எங்கேயாவது பார்த்தீர்களா உயிரை?
சற்று நேரம் வரை
நான்தான் எல்லாம் என்று எல்லோரிடமும்
பேசிக் கொண்டிருந்தது!
நீரின் சலனம் போன்றே அது தளும்பிக்
கொண்டிருந்தது!
அரூபம் ஆச்சரியமாய் விரிந்து
அனைத்தையும் அடக்கத்தில் வைக்க முயன்று
தோற்றுப்போனதில் எங்கேயாவது தப்பித்துப்
போயிருக்கலாம்.
எங்கேயாவது பார்த்தீர்களா உயிரை?
உங்களை மேகமெனக் கடந்து போயிருக்கலாம்...
காற்றின் திசையில்
பெரும் அசைவைக் கண்டாலும் சொல்லுங்கள்!
அதன் கைகளில்
அண்டம் அருவெறுப்பாகி அடங்காது
போயிருக்கலாம்.
கனவுகள் காற்றாகிப் போன பிறகு உயிரிங்கு
கனவாகிப் போயிருக்குமோ?
.

**முகமது பாட்சா**



இளநீர்களை விற்பவரும்
கரும்பு பாலை விற்பவரும்
நீண்ட நாட்களாக
அதே சாலையோரத்தில்
அருகருகே கடை வைத்திருக்கிறார்கள்
இருசக்கர வாகனங்களில் கடப்பவர்கள்
மகிழுந்துகளில் செல்பவர்கள்
நடந்து செல்பவர்கள்
தாகங்களை போக்கிக் கொள்ள
தத்தமது விருப்பங்களுக்கு ஏற்றபடி
இளநீரோ கரும்பு பாலோ
வாங்கி அருந்துகிறார்கள்
இளநீரை அறிவாளால் சீவும்
வித்தையை கரும்பு பால் விற்பவரும்
கரும்பு பாலை பிழியும்
மோட்டாரை இயக்குவதற்கு இளநீர்காரரும்
அனிச்சையாக கற்றிருக்கிறார்கள்
எந்த வாடிக்கையாளரும்
இல்லாத நேரங்களில்
இவர்கள் இருவரும்
இளநீரையும் கரும்பு பாலையும்
மாறி மாறி குடிக்கும் வேளையில்
குளிர்ந்து போகிறது
இதுவரை அவர்களது தேகங்களை
வாட்டி வதைத்த வெயில்.......

**பிரபுசங்கர் க**



பெருவிளியின் சுழற்சிக்குள்
மூழ்கிக்கொண்டிருக்கிறாள்

வெளியேறிச் செல்ல
வழிமறந்துவிட்டது!

இதோ இப்பக்கமா?
இல்லையே!

சுற்றிச் சுழலும்
பிரபஞ்சத்திற்குள்ளிருந்து பெருஞ்சத்தங்கள்
கேட்கிறதே!

உற்று கவனிக்கின்றாள்!

என்னை இறுக அணைத்துக்கொள்!
அழுந்த முத்தமிடு!

நீ வெளியேற
நான் வழி சொல்கிறேன்!

பல குரல்கள் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன!

அவள் பெண்தானே
பிணமல்லவே!

இத்தனை இருளுக்குள்ளும்
காமத்தால்
கையூட்டு பெறநினைப்பவர்கள்

அவளைப் பைத்தியம் என்கிறார்கள்

அவள்
மந்தையிலிருந்து பிரிந்து சென்றுவிட்ட மனிதத்தை
நினைத்து சிரித்துக்கொண்டிருக்கிறாள்!

**லக்ஷ்மி**

# கடவுளின் மீன்கள்



ஒரு துளி கண்ணீரில் ஒளிந்திருக்கிறது இந்த
அடர்த்தியான வாழ்க்கை

கருணை பொங்கும் கடவுள்கள்
நம் வாழ்க்கையை தேர்ந்த வாசகங்களால எழுதிக் கொண்டே
செல்கிறார்கள்

எழுதியவைகளை முகநூலில் பதிவிட்டு விட்டு
நம்மை விருப்பக்குறியிட வைக்கிறார்கள்

“அற்புதம் தலைவா “
என கருத்திடப்
பணிக்கிறார்கள்

தொலைக்காட்சிகளில் தோன்றி
வாழ்வது எப்படி என்று
வகுப்பெடுக்கிறார்கள்

பற்பசை விளம்பரங்களில் தோன்றும்
தேவதைகள் கள்ளம் கபடமற்று
சிரிப்பது எப்படி என்று
பார்வையாளர்களுக்கு
கற்றுத் தருகிறார்கள்

இடுப்புக்கு கீழே தொங்கும்
செயற்கை இழை கூந்தலை
தந்தச் சீப்பினால் நீவி விடுகிறார்கள்

கை தட்ட தோன்றுகிறது
ஆனால் அசைக்க முடியவில்லை
விலங்குகளால் பிணைக்கப்பட்டுக் கிடப்பதே
தெரியவில்லை நமக்கு

“ அருமை கடவுள்களே”
எங்கள் கைவிலங்குகளை
கழற்றி விடுங்கள் என்று கத்துகிறோம்

சாவி மேலிடத்தில் இருக்கிறது
கூலிக் கடவுள்கள்
பதிலுரைக்கிறார்கள்

மேலிடத்தைப் பார்க்கிறோம்
தலைமைக் கடவுளரின்
பிரத்யேக அறையில்
இந்த பொன்னான வாசகங்கள்
பொறிக்கப்பட்டிருக்கின்றன

“தூண்டில் முள்ளில் குத்தப்பட்டவையெல்லாம்
ஆசீர்வதிக்கப்பட்ட மீன்கள்

கடல் முழுவதும் சுதந்திரமாக
சுற்றினாலும்
கடைசியில் இங்கே வந்து
சேர்ந்து விடுங்கள்
என் அன்பான மீன்களே”

**தங்கேஸ்**

# சொற்களின் வேள்வி



திடீரெனச் சிறகடித்து அவலமாய்க்
குரலெடுத்து அடங்கிப் போகும்
சில சமயம்
துயில் இழந்து அச்சம் விரவ
உடல் நடுங்கி தலையணையை
இறுக அணைத்தபடி தவிக்கும்
சில சமயம்
சூரியன் பிளந்து சிதறும் நெருப்பாய்க்
கோபத்தில் எக்காளமிடும்
சில சமயம்
பேரிகை முரசுடன் குருதிச் சிந்த
கூதல் தேசக் குளிரும் இரவில் எரியக்கூடும்
சில சமயம்
இரந்தும் சோர்ந்தும் வீழ்ந்தும்
கனலில் தகிக்கும் மனதுடன்
புத்தன் பாதத்தில் மண்டியிடவும் கூடும்
சில சமயம்
தனக்குதானே புதைகுழியை வெட்டி அதன் மேல்
காற்றில் உறைந்திருக்கவும் கூடும்
சில சமயம்
சொற்களின் வேள்வியில் ஆகுதியாகும்
கேள்விகள்.

**பிரியா பாஸ்கரன்**

மூத்தவன்
டு வீலர் பழகியதில்
ஒடிந்த காலை ஒட்ட வைப்பதற்கான மருத்துவ
செலவில் விழி பிதுங்கி போனார் அப்பா

மூத்தவள் பருவமாற்றம் அடைந்ததில்
மகிழ்ச்சியென்றாலும் உற்றார், ஊரார்,
உறவினர்களை அழைத்து நீராட்டு விழா எடுத்ததில்
பாதி உயிர் கரைந்தார் அப்பா

நீண்ட நாளாய் வயிற்று வலியால் அவதிபட்ட
அம்மாவிற்கு
சென்ற மாதம் அறுவை சிகிச்சை செய்து
வயிற்று கட்டி அகற்றியதில் நிம்மதியடைந்தாலும்
வாங்கிய கடனில்
மூச்சி திணறினார் அப்பா,,,,

போன வாரத்தில் அத்தை மகளுக்கு
நடந்த திருமணத்திற்கு
முறை மாமன் சீர் செய்து கௌரவம்
காப்பாற்றியதில் மேலும் கடனில்
கற்பூரமாய் பொசுங்கினார் அப்பா

காட்டிற்கா? வீட்டிற்கா என இழுத்து கொண்டிருக்கும்
தாத்தா, பாட்டியின்
நொம்பலமான கடைசி காலங்களை அக்கறையுடன்
கூடவேயிருந்து கவனித்து கொண்டிருக்கும் முகம்
சுழிக்காத அப்பா

செவ்வாய், வெள்ளியானால்
வீட்டிலிருக்கும் முடமான
சாமிகளுக்கும் படியளிக்க
தவறுவதேயில்லை....

**சுயம்பு**

# மீன்காரி



இறக்க மறுத்து வாழத்துடிக்கும்
மீனின் நெற்றியினை அரிவாளின் பின்பக்க
முனையால் ஓங்கியடித்தாள் மீன்காரி

நீர்தெளித்த
கையிலிருந்து விழுந்த
சம்மட்டி அடியை

எதிர்பாராத மீனின்
கூம்பிய அதரங்களிலிருந்து
ஒழுகுகிறது மனிதமின்மை

பண்டமாற்றில்
புன்னகைத்தவாறே
காந்தி கைபுகுந்ததும்

நெகிழிப்பைக்குள்ளிருந்த
எட்டுகண்களிலிருந்தும்
உயிர்விடுகிறது அஹிம்சை

கடலைக்கொன்று
பிழைப்பை நடத்தும்
அவளை இனி மீன்காரியென
எப்படி அழைப்பது...

**ரகுநாத் வ**



எங்கிருந்து நுழைந்தது
இருவருக்குமான இடைவெளி ...

என்னில் துளிர்த்த மாற்றமா
இல்லை நமக்கான
ஏமாற்றத்தின் எதிரொலியா....

எதார்த்தம் மீறிய காதலில்
சிறு கீறலென ஊடல் .....

வலி செய்யாது
கடக்க முயன்று
தோல்வியுறும் கோபத்தில்
உணர்தலின் பிழையாய் நான்....

ரணங்களின்
மருந்தெனவே உன் குரல்....

அதுவே ரணமாகிப்போக....

உடைந்து போன கிளையோடு
வீழ்ந்த பூவென..

கோபத்தில் வீழ்ந்தது சில புரிதல்....

புரிதலுக்கும் அன்பிற்கும் இடைவெளி பொருத்தி
விலகி நின்று தவிக்கிறது மனம்...

வீழ்ந்த புரிதலுக்கும்
வீழாத அன்பிற்கும் இடையில் உனை
அணைத்தவாறு இளைப்பாறுகிறது காதல்..

**ரத்னா**

# மனதின் சிறகு



ஒற்றைச் சிறகுதுர்த்தெழும்
ஒரு பறவையைப் போலே
பெருந்துயரம் விடுத்தெழ
எத்தனிக்கிறது ஆழ்மனம்

பேராழிக்குள் அமிழ்ந்து போகாப்
பூப்பந்தாய்
கரைந்து தீராக் காயங்கள்
கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன

கண்ணாடித் துகள்களாய்
உறுத்திக்கொண்டேயிருக்கும்
தீராச் சுமைகளின் தெருக்களில்
நெருஞ்சி முட்க்குவியல்கள்

பெரு விருட்சத்தையே
வேரோடு அசைத்துப் பார்க்கிறது விதி
கொடும் வலிகளை ஏவி
எகத்தாளமிடுகிறது காலச்சதி

சிறு குழந்தையெனக் கதறியழும்
ஊமை மனதிற்குள்ளே தான்
அடைபட்டுக் கிடக்கின்றன
ஆற்றொணா வேதனைகள் பல

காரிருள் படர்ந்த வான்வெளியாய்
இடர் சூழத் தவிக்கிறது உயிர்த்திசை
அமைதி வனத்துக் கிளைகள் தேடி
அகல விரிகிறது மனதின் சிறகு!

**வேலணையூர் ரஜிந்தன்**



இப்போதெல்லாம்

நான் எந்தவொன்றையும் அவ்வளவு
ஆழமாய் நேசிக்க அஞ்சுகின்றேன்

எதுவொன்றையும் கண்மூடித் தனமாய்
நம்பிக்கை கொள்வதில் ஒன்றுக்கு நூறு தடவை
யோசிக்கிறேன்

எல்லா உறவுகளுக்குள்ளும் நிலையான
இடைவெளிகளை பேணிக் கொள்ள
முயற்சிக்கிறேன்

என்னுடன் இருப்பவர்களோடு
மிகக் கவனமாகப் பழகுகிறேன்

புதிதாய் ஓர் உறவை ஏற்படுத்திக்
கொள்கையில் வரண்டு போன வடுக்களை
மீண்டும் தடாவிப் பார்க்கிறேன்

ஆறுதெலன ஒன்றை மனது
தேடுகையில் தனிமையுடன்
என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறேன்

மாயைகளை நம்புவதை விட்டும்
மனதை எச்சரித்துக் கொள்கிறேன்

நான் உடைந்து கிடக்கும் தருணங்களில்
என் கண்ணீரை என் கைகளிடமே ஏந்திக்கொள்ள
உத்தரவிடுகிறேன்

எல்லா நேரமும் அமைதியை மட்டுமே
பதிலென ஏற்றுக் கொள்கிறேன்

உண்மையான அன்பையும்
அரவணைப்புக்களையும் ஏற்றுக் கொள்ள
முடியாமல் தவிக்கிறேன்

நிஜத்தையும் போலியையும் பிரித்துப்
பார்ப்பதில் எல்லோருடனும் விவாதிக்கிறேன்

எதிர்ப்பார்ப்புகள் வலியை மட்டுமே
தரக்கூடியது என்பதால் கனவுகளை விட்டும்
ஒதுங்கிக் கொள்கிறேன்

பிரார்த்தித்தவை கை சேர்கையில்
வேண்டாமென விட்டு தூரமாய்
விலகிச் செல்கிறேன்

புன்னகைக்குப் பின் மறைந்திருக்கும்
கண்ணீரின் கசப்பில் சில பொழுதுகளில்
புன்னகைப்பதையே மறந்துவிடுகிறேன்

யார் தேடலிலும் கிடைக்காத
ஓர் உலகத்தில் என் ஆன்மாவின்
பெரும் மூச்சை கலந்து விட தவமிருக்கிறேன்

பெருங் கோடையில் விழுந்த
மழைத்துளிபோல் என் சந்தோசங்களை
மீட்டிக் கொள்கிறேன்
அப்போது தான் நான்
நானாக உணர்ந்து கொள்கிறேன்

ம்ம்ம்ம்....

சந்தேகமே வேண்டாம்
இத்தனையும் சடுதியாய் தோன்றியிருக்க வாய்ப்பே
இல்லை
எங்கோ யாரோ சிலரால்
ஏற்பட்ட நம்பிக்கை துரோகத்தால்
எனக்கு நானாகவே வரைந்து கொண்ட எல்லைக்
கோடுகள் தான் அத்தனையும்....

**நீர்ப் பறவை**



என்னை நீங்கள்
என்னவாக நினைக்கிறீர்களோ
நல்லவனாக நடிக்க
மெனக்கிடுவதிலியே நாட்கள் செல்கிறது.

நான் சிரிக்கும்போது
என்னிடமிருந்து சில நம்பிக்கை
கையகப் படுத்தப்படுகிறது.

நான் அழும்போது
என்னிடமிருந்து சில அவமானங்கள்
உருமாற்றம் காண்கிறது.

நான் கோபப்படும்போது
என்னிடமிருந்து சில நேர்மை
உருவப்படுகிறது.

நான் ரசிக்கும்போது
என்னிடமிருந்து சில காதல்
களவாடப்படுகிறது.

நான் யோசிக்கும்போது
என்னிடமிருந்து சில கற்பனைகள்
சூரையாடப்படுகிறது.

நான் எழுதும்போது
என்னிடமிருந்து நல்லவன் மட்டுமே
வெளியேற்றப்படுகிறான்

எனக்குள் இருக்கும் தீயவனை
நானே தினம் கண்டு கண்டு
அச்சப்படுவதில் என்ன ஆனந்தமோ
இந்த வெட்கங்கெட்ட மனதிற்கு.

**நயினார்**

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..